**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 454** **நாள்: 21.12.2025**

**வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், இன்று நேரில் சென்றுப் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இன்று (21.12.2025) மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை நேரில் சென்றுப் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்/சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் தலைவர் அவர்கள், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில், சென்னை தீவுத்திடலில், கட்டடப்பட்டு வரும் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய கண்காட்சி மையத்தின் முன்னேற்றப் பணிகளையும், சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனை சாலையில் கட்டடப்பட்டு வரும் 776 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகளையும் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்தாரர்களை அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில், துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர் தொட்டி தெரு மற்றும் அண்ணா பிள்ளை தெருவில், கட்டடப்பட்டு வரும் இரத்த சுத்திகரிப்பு மையம், 844 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள், சமுதாய நலக்கூடம், மாநகராட்சி அச்சகம் மற்றும் விளையாட்டுத் திடல் என "ஒருங்கிணைந்த வளாகம்" கட்டுமானப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்தாரரை அறிவுறுத்தினார்.

பின்னர், திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதி, பெரம்பூர், சந்திரயோகி சமாதி சாலையில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டடப்பட்டு

வரும் புதிய சமுதாய நலக்கூடத்தின் முன்னேற்றப் பணிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நேரில் சென்றுப் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரரை அறிவுறுத்தினார்.

**மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனை சாலையில் கட்டப்பட்டு வரும் 776 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:**

மாநகரத்தினுடைய மக்கள் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று திராவிட மாடலும், ஆட்சியினுடைய நாயகர் எங்கள் உயிரினும் மேலான அன்புத் தலைவர் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டியதன் அடிப்படையில் பல்வேறு திட்டப் பணிகள் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்பட்டுக் கொண்டிருந்தாலும், மக்களுடைய அடிப்படைத் தேவைகளை ஒரு புறம் உயர்த்துவதற்கான திட்டங்களை மருத்துவமனைகள், பள்ளிக் கட்டடங்கள், விளையாட்டு மைதானங்கள், பொழுதுபோக்கு போன்றவற்றுக்குண்டான பாரம்பரியத்தை நினைவுபடுத்துகின்ற 50 ஆண்டுகள், 60 ஆண்டுகளுக்கு முன்பாக கட்டப்பட்ட பேருந்து நிலையங்கள் இப்படி பல்வேறு பணிகளை எடுத்துக் கொண்டாலும், சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமம் சார்பில் ஒரு 1200 குடியிருப்புகளை முழுவதுமாக குடிசை மாற்று வாரிய குடியிருப்பு வாசிகள் என்ற சாயலே இல்லாத அளவில் இருக்க, மிகுந்த நேர்த்தியோடு உறுதித் தன்மையோடு அந்த மக்களுக்குத் தேவையான படிப்பகம், நூலகம், அங்கன்வாடி கட்டடங்கள், அதேபோல் பூங்காக்கள், மின்தூக்கி வசதிகளுடன் கூடிய 776 குடியிருப்புகள் இந்த இடத்தில் ஸ்டான்லி நகர் என்று சொல்லப்படுகின்ற கொண்டித்தோப்பு பகுதியில் தற்போது உருவாகிக் கொண்டிருக்கிறது.

இது கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நான்காம் தேதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வால்டாக்ஸ் சாலை வாட்டர் பேசின் ரோட்டில் பல்வேறு திட்டங்களோடு சேர்த்து இந்த திட்டத்தையும் திறந்து வைத்தார். இதில் இந்த பணி டிசம்பர் மாதம் 15ஆம் தேதிக்குப் பிறகு மேற்கொள்ளப்பட்டன. இடையிலே மூன்று பெருமழை வெள்ளங்களை சந்தித்துள்ளது. அவற்றை எல்லாம் கடந்து கிட்டத்தட்ட 13 மாத காலங்களில் இந்த கட்டிடங்கள் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டு, வறுமைக் கோட்டிற்கு கீழே வசிக்கின்ற மக்கள், குறிப்பாக சாலை ஓரங்களில், கால்வாய் ஓரங்களில் வாழ்வாதாரம் இல்லாமல் பத்துக்கு பத்து இடத்தில் வசித்துக் கொண்டிருக்கின்ற மக்கள் வாழ்க்கையின் அபாயங்களோடு வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்கள் எந்தவித தடையும்

இல்லாமல் முழுக்க முழுக்க பயனாளிகளைத் தேர்வு செய்து, ஜனவரி 20ஆம் தேதிக்குள் மாண்புமிகு தமிழக முதல்வர் எங்கள் உயிரினும் மேலான அன்புத் தலைவர், காக்கும் கரங்களுக்கு சொந்தக்காரரான அபாயக் குரலை போற்றுகின்ற வல்லமை பெற்றவராக மனிதசக்தி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொற்கரங்களால் திறந்து வைக்கப்பட்டு, இதே இடத்தில் அதற்குண்டான நியமன ஆணைகளையும் வழங்கி, ஒரு அதிசயத்தை—ஏற்கனவே பல்வேறு அதிசயங்களை நிகழ்த்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் "சொன்னதையும் செய்வோம், செய்வதைத்தான் சொல்வோம்" என்ற கூற்றுக்கு மேலும் ஒரு உதாரணமாக—இந்த சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பாக கட்டப்படுகின்ற இந்த கட்டடத்தின் திறப்பு விழா அமையும் என்று மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்கு பேருதவியாக இருந்து எங்களுக்கு பல்வேறு வகையில் ஆலோசனைகளை நல்கியுள்ள மாநிலத்தின் துணை முதலமைச்சர் அன்பிற்கினிய அண்ணன் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள், எங்கள் துறையினுடைய செயலாளர் அன்பிற்கினிய திருமதி. காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்களுக்கும், சி.எம்.டி.ஏ. உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., முதன்மை செயல் அலுவலர் திரு.சிவஞானம், இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., அவர்களுக்கும், அதேபோல் ஏற்கனவே இந்தத் திட்டத்தை வகுத்துத் தந்த அன்பிற்கினிய திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்களுக்கும் இந்த நேரத்தில் துறையினுடைய அமைச்சர் என்ற வகையில் மனமார்ந்த, நெஞ்சார்ந்த நன்றிகளும் மகிழ்ச்சி கலந்த வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**தொழில்துறை மற்றும் இந்து சமய அறநிலையத்துறை குறித்து படத்தில் வந்த காட்சிகள் குறித்து செய்தியாளர் கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதில்:**

அந்தப் படத்தின் தரத்தில் நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். தியேட்டர்களில் வெளியிடுவதற்கு கொஞ்சம் கூட தகுதி இல்லாத ஒருவர்தான் நீங்கள் சொல்கின்ற பெயருக்கு உரியவர். இரண்டாவது, இந்த ஆட்சியைப் பொறுத்த அளவில் எல்லோருக்கும் எல்லாம் என்ற ஆட்சி. இனத்தால், மொழியால், மதத்தால் நாங்கள் யாரையும் பிளவுபடுத்திப் பார்ப்பதில்லை. எனக்கு அருகிலேயே நிற்கின்ற ஐஏஎஸ்

அதிகாரி எந்த மதம் என்று எங்களுக்கு தெரியாது. கேள்வி கேட்கின்ற நீங்களும் எந்த மதம் என்று எங்களுக்கு தெரியாது. ஏதாவது இப்படி கேள்வி கேட்கின்ற பொழுது விரும்பத்தகாத நிகழ்வுகள் என்றால் கூட, நீங்கள் எந்த பத்திரிகையாளர் என்று தான் கேட்போம்; தவிர எந்த மதம் என்று நாங்கள் கேட்பது கிடையாது.

நீங்கள் சொல்லும் அந்த நபரிடம் ஏதாவது பத்திரிக்கை செய்தி கேட்டிருந்தீர்கள். அவர் குறிப்பிட்டு பேசுவது எந்த மதம் என்று தான்; அதனால் மதத்தால், இனத்தால், மொழியால் மக்களை பிளவுபடுத்த வேண்டும் என்று அந்த தீய சக்தி இந்த தமிழகத்தில் அவர்களுடைய பணிகள் எடுபடாது. அதனுடைய குமுறல்தான் திருக்கோயில்களில் 4000 திருக்கோயில்கள் குடமுழுக்கு காணப்பட்டிருக்கிறது. அதுவும் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சி.

சனீஸ்வரர் ஆலயம் வியாசர்பாடியில் அமைந்திருக்கிறது. சூரிய ஒளி நேராக அந்த பகவான் மீது படுகின்ற ஒரு ஐதீகம் இன்றைக்கும் இருக்கிறது. அந்த திருக்கோயில் ஐந்தரை அடி பள்ளத்தில் சென்றுள்ளது. தரை மட்டத்திலிருந்து அதை இடித்து கட்டுவதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை. இடித்து கட்டுவதற்குண்டான கட்டுமானத்திற்கு வல்லுநர்களும் நம்மிடத்தில் இல்லை. ஆகவே லிப்டிங் முறையில் அதை தூக்கிக் கொண்டிருக்கிறோம். 24 திருக்கோயில்களை தமிழகத்தில் அதேபோல் லிப்டிங் முறையில் தூக்குவதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மாலையில் கூட காளிகாம்பாள் திருக்கோயிலில் அந்தப் பணிகளை நானே சென்று ஆரம்பித்தேன். அதில் 11 திருக்கோயில் பணிகளை முடித்திருக்கிறோம். சனீஸ்வரர் ஆலயத்தில் அந்தக் கோயிலுடைய குடமுழுக்கு நடைபெற இருக்கிறது.

இப்படிப்பட்ட ஆன்மீகப் புரட்சி பல்வேறு வரலாற்றுச் சான்றிதழ்களில் எதிர்பார்க்கும் இந்த ஆட்சிக்குப் பிறகு 100 ஆண்டுகள் கழித்தாலும் கூட, இந்த ஆட்சியில் செய்த சாதனைகளை, இந்து சமய அறநிலையத் துறையை எந்த காலத்திலும் வெல்ல முடியாத அளவிற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் திராவிட மாடல் ஆட்சியில் ஆட்சியினுடைய நாயகர் முழு சுதந்திரம் அளித்து, திருக்கோயில் வரலாற்றில் இந்து சமய அறநிலையத்துறை பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய வரலாற்றுக் காலத்தை உருவாக்கிய பெருமை எங்கள் நாயகர்களுக்கே உரியது.

நேற்றைக்குகூட பார்த்தால், காலையில் பாம்பன் சுவாமிகளின் 6,666 பாடல்களை புதிதாக புத்தக வடிவில் தயாரித்த அந்தப் பதிப்பை வெளியிட்டோம். அவர் வாழ்ந்த மண் இது. அந்தத் திருக்கோயில் 36 ஆண்டுகளாக நீதிமன்ற வழக்கால் தடைப்பட்டிருந்த

சூழலில், அந்தத் திருக்கோயில் நெறிப்படிகுடமுழுக்குகளை வெற்றிகரமாக முடித்திருக்கிறோம்.

இதையெல்லாம் கடந்தால், நேற்று மாலை எடுத்துக் கொண்டால், காலையில் பார்த்தசாரதி கோயிலில் குடமுழுக்கு நிகழ்ச்சி, மாலையில் எடுத்துக் கொண்டு பிரார்த்தனை கச்சாரிஸ்வரர் கோவில் இப்படி நாளும் அற்புதங்களை நிகழ்த்தி மகிழ்ச்சியைத் தருகின்ற திராவிட மாடல் ஆட்சியினை உதவாக்கரைகளால் ஏதும் செய்து விட முடியாது என்று தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின்போது, மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா, திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு. தாயகம் கவி, சி.எம்.டி.ஏ. உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., முதன்மைச் செயல் அலுவலர் திரு. சிவஞானம், இ.ஆ.ப., வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., மத்திய வட்டார துணை ஆணையர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மண்டலக் குழுத்தலைவர்கள் (இராயபுரம்) திரு.பி.ஸ்ரீராமுலு, (திரு.வி.க.நகர்) திருமதி சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் திரு.தாஹா நவீன், திரு.ராஜேஷ் ஜெயின், மாநகராட்சி மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**